# புலத்சிங்ஹல பிரதேச சபை

# களுத்துறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 சனவரி 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள புலத்சிங்ஹல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைச்சீட்டுக் கட்டண வருமானம், முத்திரை வருமானம் மற்றும் சம்பளங்கள் மற்றும் ஊதியச் செலவினங்கள் கணக்கிடப்படுகையில் வருட ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் சீராக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான வருமானமும் செலவினமும் முறையே ரூபா 1,046,250 ஆகவும் ரூபா 72,127 ஆகவும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோர் கணக்கிற்கு நிலுவையாகக் காணப்பட்ட செலவினம் ரூபா 1,730,408 ஆன போதிலும்

2012 சனவரி 01 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 8,384 ஆகக் காணப்பட்டது. ஒன்றிணைந்த கொடுப்பனவுப் பகுப்பாய்வின் படி 2012 கடன்கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,803,871 தொகை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யாது 2013 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோருக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,168,342 தொகையான கடன்கொடுத்தோர் கணக்கிற்குக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) சபையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குப் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்ற பெறுமதி சேர் வரி வருமானத்தின் (வெளியீடும்) சபையால் செலுத்தப்பட்டிருந்த (உள்ளீடு) பெறுமதி சேர் வரிச் செலவினங்கள் சீராக்கப்பட்டு மிகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பெறுமதி சேர் வரி வருமானம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த டயர்களின் ரூபா 609,139 பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் களஞ்சிய இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் களஞ்சிய மீதி ரூபா 609,139 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக கணக்கிடப்படுவதற்கு காரணம் அவதானிக்கப்பட முடியாத ரூபா 199,090 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் நடைபெறும் வேலைகளுக்கான பட்டியலிடலாக ரூபா 16,848,511 தொகை அக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், இப் பதிவுகளுக்குரிய எதிர்ப் பதிவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2009 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 2,556,279 தொகையான கடன் தொகை கடன் கணக்கிற்கு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நடைபெறும் ˙ளில் உள்ள வேலைகளுக்காகக் கிடைக்க வேண்டிய பணத்தொகையான ரூபா 2,026,299 தொகை முன்னைய ஆண்டில் வேலைக கடன்பட்டோர் கணக்கிற்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்தமையைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது தொங்கல் கணக்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) வேலைக் கடன்பட்டோர் பதிவளிப்புகளான ரூபா 26,014,349 தொகை முன்னைய ஆண்டின் வேலைக் கடன்பட்டோர் கணக்கிற்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தமையைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது தொங்கல் கணக்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 29,600,825 தொகை அதிகரித்துப் பட்டியலிடப்பட்டமையை அகற்றுவதற்காக முன்னைய ஆண்டின் வேலைக் கடன்கடன்கொடுத்தோர் கணக்கிற்கு மாத்திரம் வரவு வைக்கப்பட்டிருந்தமையைச் சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் போது தொங்கல் கணக்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்தமையால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,500,000 தொகை காசுக் கணக்கு வரவு வைக்கப்பட்டு நிலையான வைப்புக்களும் வேறு உதவிகளும் எனும் கணக்குகள் இரண்டும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(ஓ) வேலைக காசுக் கணக்கிலிருந்து பொது நிதிக் கணக்கிற்கு ரூபா 2,600,000 தொகை மாற்றப்படுகையில் உரிய காசுக் கணக்கு வரவும் செலவும் வைக்கப்பட்டிருந்த போதிலும் வருமான உதவிக் கணக்கும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,670,959 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,915,803 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 570 | 384 | 201 |
| (ii) | வாடகை | 25 | 4 | 488 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 150 | 133 | 24 |

#### 2.2.2 ஏக்கர் வரி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 83,984 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 30 காணி உரிமையாளர்களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ந்து அறவிடப்படாதிருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 66,706 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 வியாபார அனுமதிப்பத்திரமும் வேலை வரியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 37 நிறுவகங்களில் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 24,000 தொகையும் 42 வேலைகளிலிருந்து வேலை வரியாக ரூபா 29,500 தொகையும் அறவிடப்படுவதற்கிருந்ததுடன் இதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 மார்ச் 22 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நிலைய வரி**

1988 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் நிலுவையான நிலைய வரி மீதி ரூபா 11,863 தொகையும் 1989 இற்கு உரித்தான ரூபா 25,168 தொகையும் 2000 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதி ரூபா 463,684 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், மொத்த நிலுவை வரி மீதி ரூபா 500,716 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகள் உரிய ஆண்டுகளின் போது அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் கணக்காய்வுத் தினமாகிய 2013 மார்ச் 22 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டன.

**2.2.5 ஏனைய வருமானம்**

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஒரு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 36,590 தொகை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெறப்படுவதற்கு 2013 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2010 சனவரி முதல் 2012 திசெம்பர் வரை அறவிடப்பட்டிருந்த முத்திரைக் கட்டணப் பட்டோலையைப் பெறுவதற்கு 2013 மார்ச் 19 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 7,801,003 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,396,886 |

**2.2.7 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்த 04 நிறுவனங்களிடமிருந்து தொடர்ந்தும் அந் நிறுவனங்கள் இயங்குகின்றனவா என்பதைக் குறித்து உறுதிப்படுத்தி மீள அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடிய 25 துறைகளில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட சுற்றாடல் வன்முறைகளைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளைச் செயற்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு எந்த நிகழ்ச்சியும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பாதுகாப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

18 நிலையங்களில் 2012 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கப்படுவதற்கு ரூபா 45,696 தொகை செலவிடப்பட்டு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் இதில் ஒரு நிலையங்கள் மாத்திரமே வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பெற்ற வருமானம் ரூபா 25,000 ஆகும்.

## 2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் சமய, புண்ணிய, சுகாதார, வினோத அல்லது கல்வி நடவடிக்கைகள் தொடர்பான செலவினம் ஒரு வருடத்திற்கான கூட்டுத்தொகையான ரூபா 1,000 ஐப் பார்க்கிலும் அதிகரிக்குமாயின் அமைச்சரின் முழு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான அங்காரம் இன்றி ரூபா 32,537 தொகை இளைஞர் அணி ஒன்றிற்கு சீருடை வழங்கப்படுவதற்கும் அறநெறிப் பாடசாலை ஒன்றிற்கு புத்தகங்கள் வழங்கப்படுவதற்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

### 2.5.1 அமரகெதர கமபொக்காவ வீதி

அமரகெதர கமபொக்காவ மேற் பகுதி வீதியின் I ஆம் கட்டத்தின் கீழ் 225 மீட்டர் நீளமும் 2.4 மீட்டர் அகலமும் (பக்கச்சுவருடன்) பிணைப்புக் பிணைப்புக் கற்கள இடப்படுவதற்காக ரூபா 890,140 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 மார்ச் 21 ஆம் திகதி தொழிநுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 18,000 செலுத்தி பிணைப்புக் கற்கள் தொடர்பான தரப் பரீட்சை அறிக்கை ஒன்றைப் பெற்றிருந்த போதிலும் இடப்பட்டிருந்த பிணைப்புக் கற்களில் சிப் கற்கள் வெளிவந்திருந்ததுடன் பல பிணைப்புக் கற்கள் உடைந்திருந்தன.

(ஆ) இரு மருங்கிலும் கால்வாய்கள் தயாரிக்கப்பட்டு தோள்களைத் தயாரிப்பதற்காக ரூபா 6,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிராமை.

(இ) தேவையான பகுதிகளில் ஏபீசீ ஸ்தாபிக்கப்பட்டு 1-2 தொன் பயன்படுத்தப்பட்டு இடித்து மட்டப்படுத்துவதற்காக ரூபா 11,437

தொகையும் துணை தட்டு தயாரிக்கப்பட்டு கற்தூள்கள் வழங்கப்பட்டு பரப்பி மட்டப்படுத்துவதற்காக ரூபா 28,390 தொகையும் பரப்பப்பட்ட கற்தூள்களின் மட்டத்தின் மேல் கம்பெடர் பயன்படுத்தப்படுவதற்காக ரூபா 5,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் பல பகுதிகளில் பிணைப்புக் கற்கள் ஒரே நிலையில் இல்லாதிருந்ததுடன் ஆங்காங்கே கற்கள அமிழ்ந்து உயர்வு தாழ்வடைந்திருந்தன.

## 2.5.2 பொல்கொட பொது நூலகக் கட்டிட நிர்மாணிப்பு

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7,535,372 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு நூலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதில் 93 சதவீதமும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 7 சதவீதம் சபையால் ஏற்கப்பட வேண்டியதாக இருந்தது. 2013 மார்ச் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) நூலகக் கட்டிடத்தில் வெடிப்புகள் ஏற்பட்டிருந்ததாக நூலக உதவியாளரால் 2011 திசெம்பர் 07 ஆம் திகதி அறிவித்திருந்ததுடன் 2012 செப்தெம்பர் மாதம் தயாரிக்கப்பட்டு இறுதிக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் சுவர் சீலிங்கிற்கு கீழ் வெடித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கட்டிடத்தின் சுவர்கள் மிகவும் உயரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கூரை பிணைப்பு சுருங்கியமையால் பக்கக் கதவுகளிலிருந்து நூலகத்திற்கு மழைநீர் வழிந்தோடி வருவதாகவும் சுவர்கள் அனைத்தும் அதிகமான அளவில் நனைந்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) நூலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான மின்சாரம் சபையிடம் உள்ள பொல்கொட மயானத்திலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 40,000 தொகை கழிக்கப்படாது ஒப்பந்தக்காரருக்கு முழுத்தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

### 2.6.1 தீர்க்கப்படாத கணக்குகள்

(அ) பல ஆண்டு காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 17,798 தொகையான மின் களஞ்சிய மீதி, ரூபா 114,070 தொகையான வீதி விளக்கு மானிய மீதி மற்றும் ரூபா 491,753 தொகையான பெறவேண்டிய பெறுமதி சேர் வரி மீதி இனங்காணப்பட்டு அறவிடப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிராத ரூபா 43,859 தொகையான முற்பண மீதி உரிய நபர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 2013 சனவரி 10 ஆம் திகதி சபையின் அங்கீகாரத்துடன் பதிவளிக்கப்பட்டிருந்தது.

### 2.6.2 ஊழியர் கடன்

5 எழுதுவினைஞர்களிடமிருந்தும் ஒரு சுகாதார ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய இடர், விசேட மற்றும் ஏனைய கடன் மீதியான ரூபா 86,504 தொகை 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் 2013 மார்ச் 22 ஆம் திகதி வரையிலும் இம் மீதி மாற்றமடையாது காணப்பட்டது. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் இப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.3 கொள்வனவுத் திட்டம்

வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.4 பாதீடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 பாதீட்டு மதிப்பீட்டின் படி வருமானத் தலைப்பு 20 இன் (வாடகை வருமானம்) உப தலைப்பு 07 இன் கீழ் ரூபா 27,500,000 தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு ரூபா 563,150 மாத்திரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உழைக்கப்பட்டிருந்ததுடன் வருமான உப தலைப்பு 4 இல் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவினத் தலைப்பு 53 இற்காக ரூபா 10,039,500 கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வாகன கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) பாதீடு